FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2022 ஜூலை Vol. 02 - தொகுதி 07



சிரச ஊடகவியலாளர்களை பொலிஸார் தாக்கியமை.

ஊடகவியலாளர்கள் மீதான இராணுவ அதிகாரிகளின் தாக்குதல்.

போராட்டத்தில் கலந்துகொண்டமை என்ற குற்றச்சாட்டில் இஸ்மத் மௌலவி கைதுசெய்யப்பட்டமை.

ஊடக சுதந்திரம் குறித்து ஜூலை மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 28 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜூலை 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 10 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 16 சம்பவங்கள், ஊடக சுயாதீனத்துவம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 01 சம்பவம் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சம்பவங்கள், ஜனாதிபதியை இராஜினாமா செய்ய நிர்பந்திக்கும் வகையில் நாடு முழுவதும் ஏற்பட்ட மக்கள் எழுச்சியுடன் தொடர்புடையவை ஆகும். ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைது சம்பவங்களில் தெளிவான வளர்ச்சிப்போக்கு ஜூலை மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## ஜூலை மாதத்தில்கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. காலி கோட்டை உயர் சுவர்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இராணுவத்தின் தலையீட்டிற்கு எதிராக அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டமை.
2. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்ட காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர் அமல் சஞ்சீவ இராணுவக் காவலில் வைக்கப்பட்டமை.
3. பிக்குகள் ஏற்பாடு செய்திருந்த சத்தியாக்கிரகத்திற்கு எதிராகப் பொலிஸார் நீதிமன்றில் தடை உத்தரவைப் பெற்றமை.
4. போராட்டங்களுக்குஎதிராகஇராணுவப்பலத்தைப்பயன்படுத்துவது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டமை.
5. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று போராட்டக்காரர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை.
6. காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களான டிலான் சேனாநாயக்க மற்றும் அனுருத்த பண்டார ஆகியோர் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டமை.

7. பொலிஸ்மா அதிபர், ஜூலை 08 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்தமை.

8. கடந்த ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு அருகே நடைபெற்ற போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் உட்பட ஏராளமானோர் தாக்கப்பட்டமை.

9. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்த போராட்டக்காரர்கள் குழு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு உள்ளடக்கத்தின் மீது இடையூறு விளைவித்தமை.

10. ஜூலை 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், இடைக்கால ஜனாதிபதியினால் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தமை.

11. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி பொதுமகன் ஒருவரை உதைப்பதை காணொளி பதிவுச் செய்த நபரை அச்சுறுத்தியமை.

12. ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பேமச்சந்திர உள்ளிட்ட 09 பேர் கைது செய்யப்பட்டமை.

13. ஜூலை 9 ஆம் திகதி பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அறிக்கையிடச் சென்ற சிரச ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை.

14. பொல்துவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் காயமடைந்தமை.

15. எம்பிலிப்பிட்டிய போராட்டக்களத்தில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை சம்பவம்.

16. ஜனாதிபதி செயலகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் தங்கியிருந்த போராட்டக்காரர்கள் மற்றும் சம்பவத்தைத் அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை.

17. காலிமுகத்திடல் பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு அருகில் இருந்த நான்கு போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமை.

18. வெல்லவாய ஊடகவியலாளரான இந்திக கருசிங்க பதிவிட்ட முகப் புத்தக பதிவு தொடர்பில் பொலிஸ் அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஊடகவியலாளர் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டமை.

19. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரும் சுதந்திர ஊடகவியலாளருமான அந்தோனி வேரங்க புஷ்பிகா டி சில்வா கைது செய்யப்பட்டமை.

20. போராட்டக்காரரான பெதும் கேர்னர் கைது செய்யப்பட்டமை.

21. இடைக்கால ஜனாதிபதி அவர்களால் அவசரகால நிலைப் பிரகடனம் செய்யப்பட்டமை மற்றும் அதைப் பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றியமை.

22. எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் பொலிஸாரின் தாக்குதலைப் படம்பிடித்த சமூக ஊடக ஆர்வலர் ரவீஷ திலகவர்தன பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை.

23. போராட்டத்தின் முன்னணி ஆர்வலர்கள் 6 பேருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்தமை.

24. போராட்டத்தின் செயல்பாட்டாளர் தானிஷ் அலி விமானத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டமை.

25. ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அவசரகாலச் சட்டங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யக் கோரி அடிப்படை உரிமைகள் மனுவொன்றை சமர்ப்பித்தமை.

26. Xposure News ஊடக நிறுவனத்தின் அலுவலகம் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்திற்குள் நுழைந்த அடையாளம் தெரியாத குழுவினர், அங்குப் பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள்குறித்த தகவல்களைத் திரட்டியமை.

27. 'கோதாகோகம' தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொலிஸார் இழப்பீடு வழங்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம்.

28. போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தினால் பேருவளை இஸ்மத் மௌலவி கைது செய்யப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 ஜூலை மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 10 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 16 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 01 |
| **மொத்தம்** | **28** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் காணப்படுதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 10 சம்பவங்கள் ஜூலை மாதத்தில் அறிக்கையிடப்பட்டன.**

**அட்டவணை 2: 2022 ஜூலை மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 10**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 05 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 05 |
| **மொத்தம்** | **10** |

1. **காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களான டிலான் சேனாநாயக்க மற்றும் அனுருத்த பண்டார ஆகியோர் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டமை.**

அவர்கள் இருவரும் ஜூலை 4ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டனர். முகப்புத்தக நேரலை மூலம் போராட்டம் தொடர்பான தகவல்களைப் பரப்புவது உள்ளிட்ட சமூக ஊடக நடவடிக்கைகள்குறித்து திலான் சேனாநாயக்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதுடன், ஜூலை 9ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டம் குறித்த சமூக ஊடக பதிவு தொடர்பில் அனுருத்த பண்டாரவிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://www.facebook.com

2. **பொலிஸ்மா அதிபர், ஜூலை 08 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்தமை.**

மேல் மாகாணத்தில் உள்ள 7 பொலிஸ் அதிகார எல்லைகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட சட்டத்துறை நிபுணர்கள், பொலிஸ் மா அதிபருக்கு அவ்வாறான உத்தரவை விதிக்க அதிகாரம் இல்லையெனச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஜூலை 9 ஆம் திகதி காலை, பொலிஸ்மா அதிபரால் குறித்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது. சுதந்திர ஊடக இயக்கமும் இந்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டது.

ஆதாரம்: https://www.bbc.com

3. **கடந்த ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு அருகே நடைபெற்ற போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் உட்பட ஏராளமானோர் தாக்கப்பட்டமை.**

இந்தத் தாக்குதல்களில் 11 ஊடகவியலாளர்கள் உட்பட 113 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மறுநாள் (ஜூலை 10) 22 பேர் வைத்தியசாலையில் வதிவிட சிகிச்சை பெற்று வந்தனர். ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயிலுக்கு அருகில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மாத்தறையைச் சேர்ந்த ஜனக லலித் ஜயசேனவுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. போராட்டக்காரர்கள்மீது இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாக எழுந்த குற்றச்சாட்டை இராணுவம் மறுத்துள்ளது.

ஆதாரம்: 1. https://mawbima.lk
2. https://www.runews.lk

4. **எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி பொதுமகன் ஒருவரை உதைப்பதை காணொளி பதிவுச் செய்த நபரை அச்சுறுத்தியமை.**

கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதி குருநாகல் யக்கஹபிட்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் காணொளிப்பதிவு சமூகவலைத்தளங்களில் வெளியானதையடுத்து, தாக்குதலை நடத்திய அதிகாரி லெப்டினன்ட் கேணல் விராஜ் குமாரசிங்க தனக்கு தொலைபேசியில் அச்சுறுத்தியதாக அந்தக் காணொளியைப் பதிவுசெய்த ரசிக ஹேரத் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஆதாரம்: https://www.bbc.com/sinhala

5. **ஜூலை 9 ஆம் திகதி பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அறிக்கையிடச் சென்ற சிரச ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை.**

ஊடகவியலாளர்களை இலக்காகக்கொண்டு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் இந்தத் தாக்குதலில் ஊடகவியலாளர்களான சரசி பீரிஸ், ஜூடீன் சிந்துஜன், ஜனித் மென்டிஸ், வருண சம்பத், காளிமுத்து சந்திரன், சானுக வீரகோன், பனிந்து லொகுருகே ஆகியோர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு உத்தரவிட்ட சிறப்பு அதிரடிப்படையின்

(STF) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பணி இடைநீக்கம் செய்யப்பட்டு ஜூலை 21 முதல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார்.

ஆதாரம்: https://www.youtube.com

6. **பொல்துவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் காயமடைந்தமை.**

ஜூலை 13 ஆம் திகதி அன்று நடைபெற்ற போராட்டத்தைக் கலைப்பதற்காகக் கண்ணீர் புகை, நீர்த்தாரை தாக்குதல்கள் மற்றும் பெடன் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்குக் காயமடைந்த 84 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இரு ஊடகவியலாளர்களும் உள்ளடங்குவதாகத் தகவல் கிடைத்ததுடன் அவர்கள் குறித்த மேலதிக தகவல்களைப் பெற்றுகொள்ள முடியவில்லை.

ஆதாரம்: https://www.facebook.com

7. **எம்பிலிப்பிட்டிய போராட்டக்களத்தில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை சம்பவம்.**

கடந்த 20ஆம் திகதி இரவு எம்பிலிப்பிட்டிய நகரசபைக்கு முன்பாகத் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள்மீது குண்டர்கள் குழுவொன்று தடிகளுடன் தாக்குதல் நடத்தியது. காயமடைந்தவர்களில் ஒருவர் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஆதாரம்: https://www.youtube.com

8. **ஜனாதிபதி செயலகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் தங்கியிருந்த போராட்டக்காரர்கள் மற்றும் சம்பவத்தைச் அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை.**

ஜூலை 22 அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக, அடையாளம் வெளியிடப்படாத இடைக்கால இராணுவத்தைச் சேர்ந்த ஒரு குழுவும் இதில் பங்கேற்றதாகக் கூறப்படுகின்றது. ஊடகவியலாளர்களான கசுன் குமாரகே, சதுரங்க பிரதீப் குமார ஆகியோர் இராணுவத்தினரால் இரகசியமாகப் பல மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதுடன், ஊடகவியலாளர்களான ரசிக குணவர்தன, ஷபீர் மொஹமட், ஜெரீன் சாமுவேல்ஸ் ஆகியோரும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். மனித உரிமை ஆர்வலரான சட்டத்தரணி நுவன் போபகேயும் தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதலில் 48 போராட்டக்காரர்கள் காயமடைந்தனர் மற்றும் 9 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தத் தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: 1. https://www.youtube.com

2. https://divaina.lk

9. **வெல்லவாய ஊடகவியலாளரான இந்திக கருசிங்க பதிவிட்ட முகப் புத்தக பதிவு தொடர்பில் பொலிஸ் அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஊடகவியலாளர் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டமை.**

“சீருடையின் அதிகாரத்தில் எரிபொருள் கடத்தும் அதிகாரி“ ஒருவர் தொடர்பில் அந்தப் பதிவு இடப்பட்டுள்ளதுடன், வெல்லவாய காவல்துறையின் உப பரிசோதகரான பண்டார என்பவர் இது தொடர்பான முறைப்பாட்டை சமர்ப்பித்திருந்தார். குறித்த பதிவை இட்ட ஊடகவியலாளர் மற்றும் அதற்குப் பதிலளித்த சில நபர்கள் காவல்துறைக்கு அழைக்கப்பட்டனர். பின்னர், புகாரைப் பரிசீலிக்காமல் குறித்த முறைப்பாட்டை முடித்து வைக்கக் காவல் நிலைய பொறுப்பதிகாரி முடிவு செய்தார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

10. Xposure News **ஊடக நிறுவனத்தின் அலுவலகம் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்திற்குள் நுழைந்த அடையாளம் தெரியாத குழுவினர், அங்குப் பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள்குறித்த தகவல்களைத் திரட்டியமை.**

ஜூலை 27 ஆம் திகதி அன்று, கொழும்பு மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள இந்த வீட்டுத் தொகுதிக்கு வந்த சில நபர்கள், பாதுகாப்பு அதிகாரிகளிடம் பலரது புகைப்படங்களைக் காட்டி, அவர்கள் வளாகத்தில் இருக்கிறார்களா என்று வினவியுள்ளதுடன், குறித்த வளாகத்தில் சிசிடிவி கேமராக்களை சரிபார்க்க விரும்புவதாகக் கூறினர். இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள டிஜிட்டல் பத்திரிக்கையாளர் சங்கம் (DJC) இது காவல்துறையின் செயல் எனக் கூறியுள்ளது.

ஆதாரம்: https://www.dailymirror.lk

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஜூலை மாதத்தில், ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 19 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் ராஜினாமா செய்ய நிர்பந்தித்த போராட்டங்கள் தொடர்பான சம்பவங்களாகும். நீதிமன்ற உத்தரவை மீறுதல் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில், போராட்டக்காரர்கள்மீது காவல்துறையினர் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுத்து வருவது அவதானிக்கப்படும் சம்பவங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.**

**அட்டவணை 03 – 2022 ஜூலை : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் – 16 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 15 |
| புதிய சட்டங்களை விதித்தல் | 01 |
| **மொத்தம்** | **16** |

**01. காலி கோட்டை உயர் சுவர்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இராணுவத்தின் தலையீட்டிற்கு எதிராக அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டமை.**

ஜூன் 30 ஆம் திகதி அன்று, இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு இந்த இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் ஆயுதமேந்திய இராணுவத்தினர் எதிர்ப்பாளர்கள் வைத்திருந்த எதிர்ப்பு பதாகைகளை பிடுங்கி அழித்துள்ளனர். இராணுவத் தளபதி, காலி இராணுவத் கட்டளைத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டு போராட்டத்தில் கலந்து கொண்ட இரண்டு சட்டத்தரணிகளினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://www.news19.lk

**02. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்ட காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர் அமல் சஞ்சீவ இராணுவக் காவலில் வைக்கப்பட்டமை.**

கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு அருகாமையில் அமைதியின்றி நடந்து கொண்டமை மற்றும் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜூன் மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஜூலை 6ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவருக்குப் பிணை வழங்கப்பட்ட போதிலும் குறித்த சந்தேக நபர் இராணுவத்திலிருந்து உரியமுறையில் பதவிவிலகாத நபர் எனக் குறிப்பிடப்பட்டதுடன் இராணுவ அதிகாரிகள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் அவரை இராணுவக் காவலில் வைக்குமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: https://begnasonline.com

**03. பிக்குகள் ஏற்பாடு செய்திருந்த சத்தியாக்கிரகத்திற்கு எதிராகப் பொலிஸார் நீதிமன்றில் தடை உத்தரவைப் பெற்றமை.**

எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி கொழும்பு கோட்டை ஒல்கொட் மாவத்தையில் உள்ள போதிருக்காராம விகாரைக்கு முன்பாகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அதன் ஏற்பாட்டாளர்களான பஹியங்கல ஆனந்த சாகர தேரர், உலப்பனே சுமங்கல தேரர் மற்றும் களுபோவில பதும தேரர் ஆகியோருக்கு குறித்த பிரதேசத்திற்கு பிரவேசிப்பதை தடை செய்து அளுத்கடை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஆதாரம்: https://lankasara.com

**04. போராட்டங்களுக்கு எதிராக இராணுவப் பலத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டமை.**

ஜூலை 09 மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெற்ற போராட்டங்களின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் காவல்துறையினர் தனது பலத்தை பிரயோகித்தமை தொடர்பில் உடனடி விசாரணை மேற்கொள்ளுமாறு தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஜூலை 15 ஆம் திகதி அன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கோரிக்கை விடுத்தது.

ஆதாரம்: https://twitter.com/JDSLanka

**05. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று போராட்டக்காரர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை.**

ஜூன் 09 ஆம் திகதி கோட்டை பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் ஜூன் 22 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த லஹிரு வீரசேகர, ரத்திந்து சேனாரத்ன மற்றும் பூஜ்ய ரத்கரவ்வே ஜினரதன தேரர் ஆகியோர் ஜூலை 1ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: https://mawbima.lk

**06. ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பேமச்சந்திர உள்ளிட்ட 09 பேர் கைது செய்யப்பட்டமை.**

ஜூலை 6 ஆம் திகதி, இந்தக் குழு ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயிலுக்கு அருகில் கைது செய்யப்பட்டு ஒரு பேருந்தில் துறைமுக காவல்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்தப் போராட்டத்தை அறிக்கையிடுவதற்கு ஊடகவியலாளர்களைப் பொலிசார் அனுமதிக்கவில்லையென இளம் ஊடகவியலாளர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதாரம்: https://www.themorning.lk

**07. காலிமுகத்திடல் பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு அருகில் இருந்த நான்கு போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமை.**

உருவச்சிலைக்கு 50 மீற்றர் சுற்றளவில் யாரும் கூடுவதைத் தடைசெய்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் ஜூலை

20ஆம் திகதி பிறப்பித்த உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் ரோஹன குமார, சானக மதுசங்க, சந்திரதாச டிக்சன் மற்றும் மொஹமட் பாரூக் சும்ரி ஆகியோர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஜூலை 26 ஆம் திகதி, அவர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஜூலை 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஆதாரம்: https://www.themorning.lk

**08. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரும் சுதந்திர ஊடகவியலாளருமான அந்தோனி வேரங்க புஷ்பிகா டி சில்வா கைது செய்யப்பட்டமை.**

ஜூலை 27ஆம் திகதி, கொழும்பு புறக்கோட்டை ஊடாகப் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, சிவில் உடை அணிந்த நபர்களினால் கைது செய்யப்பட்டார், இந்தச் சம்பவம் பலவந்தமான கடத்தல் எனச் சர்ச்சைக்குள்ளானது. மே 19, ஜூன் 9 மற்றும் ஜூன் 10 ஆகிய திகதிகளில் நீதிமன்ற உத்தரவை மீறிப் போராட்டம் நடத்தியது உள்ளிட்ட குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://www.thecolombopost.org

**09.போராட்டக்காரரான பெதும் கேர்னர் கைது செய்யப்பட்டமை.**

ஜூலை 13 ஆம் திகதி பொல்துவ சந்திக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் ஜூலை 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஆகஸ்ட் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆதாரம்: http://sinhala.adaderana.lk

**10. இடைக்கால ஜனாதிபதி அவர்களால் அவசரகால நிலைப் பிரகடனம் செய்யப்பட்டமை மற்றும் அதைப் பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றியமை.**

இடைக்கால ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக ஜூலை 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், அதற்கான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டது. பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள் இதில் அடங்குகின்றன. ஜூலை 27ஆம் திகதி அவசர காலச் சட்டம் 57 வாக்குகள் பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆதாரம்: https://theleader.lk

**11. எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் பொலிஸாரின் தாக்குதலைப் படம்பிடித்த சமூக ஊடக ஆர்வலர் ரவீஷ திலகவர்தன பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை.**

ஜூலை 26 ஆம் திகதி அன்று, IDH பகுதியில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே காவல்துறையினரால் தாக்கப்பட்டதை காணொளி பதிவு செய்யும்போது காவல்துறை அதிகாரிகள் கெட்டவார்த்தைகளை கொண்டு தூற்றியதுடன் அவரைக் கைது செய்தனர். சில மணிநேரங்களுக்குப் பிறகு, சட்டத்தரணிகளின் தலையீட்டிற்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: https://www.facebook.com

**12. போராட்டத்தின் முன்னணி ஆர்வலர்கள் 6 பேருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்தமை.**

நிதி அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலக நுழைவாயிலை இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கோட்டை காவல்துறையினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, வசந்த முதலிகே, ஜோசப் ஸ்டாலின், லஹிறு வீரசேகர, ரங்க லக்மால் தேவப்ரியா, எரங்க குணசேகர, அருட்தந்தை அமில ஜீவந்த பீரிஸ் போன்ற ஆர்வலர்களுக்கு எதிராக ஜூலை 25 ஆம் திகதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆதாரம்: http://www.adaderana.lk

**13. போராட்டத்தின் செயல்பாட்டாளர் தானிஷ் அலி விமானத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டமை.**

ஜூலை 26 ஆம் திகதி, துபாய் செல்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானத்தில் இருந்தபோது குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமையவே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்த நிலையில், இந்தக் கைது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவர் போராட்டத்தில் கலந்துகொண்டது தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை காவல்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்த போதிலும் அதில் ஒரு சந்தர்ப்பம் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகாததால் குறித்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. ஜூலை 27ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை ஆகஸ்ட் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: 1. https://www.newsfirst.lk
2. https://www.bbc.com

**14. ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அவசரகாலச் சட்டங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யக் கோரி அடிப்படை உரிமைகள் மனுவொன்றை சமர்ப்பித்தமை.**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சத்குணநாதன் சமர்ப்பித்த இந்த மனுவில் ஜனாதிபதிக்கு பதிலாகச் சட்டமா அதிபர், முன்னாள் ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத், தற்போதைய ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு செயலாளர் (ஜெனரால்) கமல் குணரத்ன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆதாரம்: https://twitter.com/ambikasat

**15. 'கோதாகோகம' தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொலிஸார் இழப்பீடு வழங்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம்.**

கடந்த மே மாதம் 9ஆம் திகதி "கோதாகோகம" போராட்ட

மைதானத்தில் ஆளும்கட்சி ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல் தொடர்பான உண்மைகளை ஆராய்ந்த ஆணையம், தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்கு பொலிஸ் மா அதிபரும் ஏனைய உயர் அதிகாரிகளுமே பொறுப்பு என முடிவு செய்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல், பொறுப்பை நிறைவேற்றாத அதிகாரிகள்குறித்து விசாரணை நடத்துதல், இது போன்ற நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட பல பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆதாரம்: https://theleader.lk

16. **போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தினால் பேருவளை இஸ்மத் மௌலவி கைது செய்யப்பட்டமை.**

ஜுலை 11 ஆம் திகதி கோட்டை பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாகத் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காக "சட்டவிரோதமான கூட்டத்தில் கலந்துகொண்டார்" என்ற குற்றச்சாட்டில் ஜுலை 28 ஆம் திகதி அன்று மாளிகாவத்தையில் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், ஆகஸ்ட் 6-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆதாரம்: https://twitter.com/JDSLanka

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் 1 சம்பவம் ஜுலை மாதத்தில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பிற குறிகாட்டிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம், போராட்டக்காரர்கள்மீதான தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் மற்றும் இராஜதந்திரிகளிடமிருந்து வெளியிடப்பட்ட அதிக எண்ணிக்கையிலான அறிக்கைகளும் இந்தக் குறிகாட்டி பிரதிபலிக்கிறது. அவற்றைத் தனித்தனியாகக் குறிப்பிட முடியாது என்பது அறிக்கையின் வரம்பாகும்.**

**அட்டவணை 04–2022 ஜுலை கட்டமைப்புரீதியான விதிமுறைகள் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **ஜுலை 18 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், இடைக்கால ஜனாதிபதியினால் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தமை.**

இந்த அவசரகாலச் சட்டம் குடிமக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறுவதாகவும், அவசரகாலச் சட்டம், சட்டப்பூர்வமான கருத்துச்சுதந்திரத்தை நசுக்கவோ, போராட்டங்களைத் தடுக்கவோ, தன்னிச்சையாக மக்களைக் கைது செய்யவோ அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று சங்கத்தின் நிர்வாகக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://www.youtube.com

## ஊடக சுயாதீனத்துவம்

**ஊடக சுயாதீனத்துவ ஆக்ககூறின் கீழ், ஊடக நிறுவனத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்களின் சுயாதீனத்துவம், வெளிநாட்டு ஊடகங்களின் செய்தி ஆசிரியர் குழுவின் சுயாதீனத்துவம், அரசியல்வாதிகள், வணிக சக்திகள் மற்றும் மதம் அல்லது (வேறு) குழுக்களின் செல்வாக்கிலிருந்து ஊடக சுயாதீனத்துவம், விளம்பர அனுசரணை வழங்குதல் அல்லது வழங்காமல் இருத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக உள்ளடக்கத்தின் செல்வாக்கு செலுத்தல் போன்ற குறிக்காட்டிகள் இங்கு உள்ளடங்கும். அதன்படி, போராட்டக்காரர்கள் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மீது தாக்கம் செலுத்தியமையானது வெளித்தரப்பினரின் செல்வாக்கு காரணமாகச் சுயாதீனத்துவத்தின் மீதான தாக்கம் என்ற குறிகாட்டியின் கீழ் உள்ளடங்கும்.**

### அட்டவணை 05 – 2022 ஜூலை : ஊடக சுயாதீனத்துவம்– 01 சம்பவங்கள்

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வெளிப்புற தாக்கங்களிலிருந்தான சுயாதீனத்துவம். | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்த போராட்டக்காரர்கள் குழு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு உள்ளடக்கத்தின் மீது இடையூறு விளைவித்தமை.**

தொலைக்காட்சி வளாகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெருந்தொகையான மக்களின் பிரதிநிதிகளாக வளாகத்திற்குள் பிரவேசித்த தானிஷ் அலி மற்றும் சமிந்த கெலும் பிரிய அமரசிங்க ஆகியோர் ஒளிபரப்பை நிறுத்துமாறும், இனிமேல் போராட்டம் தொடர்பான செய்திகளை மட்டும் ஒளிபரப்புமாறும் தொலைக்காட்சி நிலைய தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்ததுடன் சுயாதீன ரூபவாஹினி மற்றும் வானொலி ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கம் செலுத்தினர். குறித்த செயற்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஆதாரம்: https://www.facebook

---

### அட்டவணை 6: ஊடக சுதந்திரம்: 2022 ஜனவரி முதல் ஜூலை வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–ஜூன் | | 2022 ஜூலை |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 35 | | 10 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 43 | 14 | 16 |
| ஊடக சுயாதீனத்துவம் | 05 | | 01 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 03 | | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 11 | 01 | 01 |
| **மொத்தம்** | **97** | | **28** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995

Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850

No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;

Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk

Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka

Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25